**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 5–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**<u>இ.ம.எண். 3/2024 இன் அ.வ.எண்.202/2010</u>**

**<u>CNR No. TNSA13-000034-2010</u>**

பாப்பு . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. பழனிமுத்து
2. பொன்னுசாமி . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 01.12.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V.R.ராஜேந்திர மகஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.ராமதாஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாவாவில் திருத்தம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

மனுதாரர் மேற்படி வழக்கில் வாதி என்றும், வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி தாவா தாக்கல் செய்த சமயத்தில் மனுதாரரின் மகன் ஹார்வெஸ்டர் டிரைவராக வெளியூர்களுக்கு அடிக்கடி சென்று வந்ததால் அவரை தாவாவில் சேர்க்காமல் தாவா சொத்துக்களை பராமரிப்பதற்காக மனுதாரர் மட்டும் தாவாவை தாக்கல் செய்ததாகவும், தற்பொழுது மனுதாரரின் மகன் பழனிசாமி அவருடன் வந்து தாவா சொத்தில் அனுபவ சுவாதீனத்தில் இருப்பதால் அவரையும் மேற்படி தாவாவில் 2ம் வாதியாக சேர்த்துக்க கொள்ளலாம் என அனுமதி வழங்கி 02.07.2024ம் தேதியன்று உத்திரவு வழங்கப்பட்டுள்ளதாகவும், எனவே மனுதாரரின் மகன் பழனிசாமியை 2ம் வாதியாக சேர்த்து வழக்கை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும், இதனால் வழக்கின் சாராம்சம் மாறாது எனவும், எனவே தாவாவை திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்து 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். தாவாவில் முதல் மனுதாரர் தனக்காகவும், தன் மகனான 2ம் வாதிக்காகவும் சேர்த்த தானே தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளதாகவும், இம்மனுவில் தான் மட்டுமே வாரிசுதாரர் என சொல்லியுள்ளதாகவும், வாதியின் கணவருக்கு வேறு மகள், மகன் வாரிசுகள் உள்ளதாகவும், அவர்களை பற்றி இம்மனுவில் சேர்க்காமல் இம்மனு தாக்கல் செய்துள்ளதால் ஏற்கத்தக்கதல்ல என்றும், மேலும் இந்த மனுதாரரும், பழனிசாமி, ராஜேந்திரன் ஆகியோர் தாவா

சொத்து சம்மந்தமான ஆவணங்களில் மோசடி செய்து 1ம் எதிர்மனுதாரரை ஏமாற்றியதாகவும், அதன்பேரில் 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலிசார் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அந்த குற்ற வழக்கில் இருந்து தப்பிக்கத்தான் இந்த 2ம் வாதியை இவ்வழக்கில் சேர்க்க வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் மனுதாரரின் மகனான பழனிசாமி என்பவரை 2ம் பிரதிவாதியாக சேர்த்து தாவாவை திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் பழனிசாமி என்பவர் போர்ஜரி செய்து 1ம் எதிர்மனுதாரரை ஏமாற்றியுள்ளதாகவும், எனவே அவர் மீது குற்ற வழக்கு உள்ளதாகவும், அதிலிருந்து தப்பிக்க வேண்டி தாவாவில் 2ம் வாதியாக சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுவையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில் இவ்வழக்கில் ஏற்கனவே இ.ம.எண்.2/2023 மனுவானது அனுமதிக்கப்பட்டு தாவாவில் 2ம் வாதியாக பழனிசாமி என்பவரை சேர்க்க உத்தரவாகியுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும் பழனிசாமி என்பவர் இவ்வழக்கின் அவசிய தரப்பினர் என்பதால் மேற்படி வழக்கில் 2ம் வாதியாக சேர்த்து வழக்கை நடத்தினால் தான் சரியான தீர்வு காண இயலும் என்பதாலும், இதனால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6. தீர்வு

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 05–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.12.05 18:08:45 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

1. மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.12.05 18:09:20 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 3/2024 இன்
அ.வ. எண். 202/2010
நாள் : 05.12.2025